# கவிஞர் வில்லவனின் கவிதைகளில் இயற்கைச் சித்தரிப்பு

*முனைவர் இர. இராஜேஷ்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்செந்தூர்

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI: https://doi.org/10.5281/zenodo.14958651

இலக்கியப் படைப்பு உண்மையானது. இலக்கியம் கூறுகின்ற கவிஞனது சிந்தனைகளும் உண்மையானவை. உண்மையைக் கூறும் கவிஞனுக்குப் பல பார்வைகள் உண்டு. அவற்றைத் தன் அறிவுப் புலனுக்கு ஏற்ப அவன் பயன்படுத்திக் கொள்கின்றான். இதனால் கவிதைப் படைப்பு கவிஞனைக் கடந்து பயணிக்கிறது. அனது இலக்கியப் பார்வை சிறந்த இலக்கியத்தைப் படைக்கச் செய்கிறது. சமுதாயப் பார்வை இலக்கியத்தில் சமுதாயத்தை உருவாக்குகிறது. இயற்கைப் பார்வைக் கற்பனையைத் தூண்டச் செய்கிறது. அகப்பார்வை வாழ்வு குறித்த தேடலை மேற்கொள்கிறது. இயற்கைப் பார்வையும், அகப்பார்வையும் கவிதைக்கு அழகைத் தருகின்றன. அவற்றைப் பார்க்கும் கவிஞனது பார்வைக்கு இலக்கிய உலகில் சிறந்த இடம் உண்டு. இயற்கையைப் புனையும் ஆற்றல் எல்லா கவிஞர்களுக்கும் வாய்ப்பதில்லை. இயற்கையுடன் ஒன்றிணைந்து அதனை ஆழ்ந்து அனுபவிக்கும் கவிஞனுக்கே அது வாய்க்கும். அத்தகைய கவிஞர்களில் ஒருவராகக் கவிஞர் கீழ்குளம் வில்லவனைப் பார்க்க முடியும். கலை வாழ்க்கைக்காக என்பதிலும் சமுதாயத்தைக் கவிஞர்கள் பாடவேண்டும் என்பதிலும் ஆர்வம் கொண்டவராக இருந்தாலும் இயற்கையின் பார்வை அவரது கவிதை புனைவுகளில் தானாகவே இடம்பெற்று விடுகின்றன. அவற்றை இக்கட்டுரை வெளிக்காட்டுகிறது.

“ஒரு கவிக்கு உணர்ச்சி மட்டும் போதாது. வாழ்க்கையை நன்றாக உணர்ந்திருக்க வேண்டும். பண்பட்ட உள்ளம், அறிவு செறிந்த மனம், எல்லாவற்றையும் அறியும் கற்பனை இவை யாவும் இலக்கியப் படைப்புக்கு இன்றியமையாதவைசுசு (ப - 65, கவிதைக் கலை, பேரா. ரா. ஸ்ரீ. தேசிகன்). இயற்கையை உணர்ந்துகொள்ளும் கற்பனையும், உலகியலை அறிந்த பண்பட்ட உள்ளமும், அனைத்தையும் அறிந்த அறிவு செறிந்த மனமும் கவிஞர் வில்லவனிடம் காணமுடிகிறது. இதனால் கவிஞன் தன் பார்வையில், “புதிய மானுடத்தின் அமைவுக்கு இயற்கையைப் பேணுவதுடன் அதனோடு இயைந்து வாழ்வதும் இன்றியமையாததாகும். இயற்கையோடு ஈடுபாடு கொள்ளும்போது அன்புணர்வும் அறவுணர்வும் பகையுணர்வும் போர் வெறியும் மறைகிறது. இயற்கையின் அழகை உள்வாங்கும்போது துயரங்கள் மறைந்து உள்ளத்தில் ஆற்றல் வளர்கிறது. இயற்கையின் கவர்ச்சியில் இரண்டறக் கலக்கும்போது பேரின்பம் பிறக்கிறது” (ப - 296, புதுக்கவிதையில் புதிய மானுடச் சிந்தனைகள், அறிவுர். சி. ஜேசுராஜ் (கீழ்குளம் வில்லவன்) என்று கூறமுடிகிறது. தன் கவிதை வரிகளில்,

***“நீ***
***சிகரங்களைத் தொட்டுவிட்டுத்***
***திரும்பி வரும்போது***
***எங்கேனும் புக்கள்***
***சிரித்துக் கொண்டிருந்தால்***
***நீயும் கொஞ்சம்***
***ரசித்துக் கொண்டிரு”***

***(ப - 9, கிழக்கு சிவக்கும், கீழ்குளம் வில்லவன்)***

என்று பாடமுடிகிறது. கவிஞனது இயற்கைப் பார்வை இங்கு விரிகிறது. எல்லாவற்றையும் இயற்கையுடன் இணைத்துக் கூறும் பக்குவத்தைக் கவிஞனுக்குத் தருகிறது. கவிஞனும் தன் அக மனத்தைக் கவிதைப் பயன்பாட்டிற்கு உள்ளாக்குகின்றான்.

இயற்கையைக் குறியீடாகப் பயன்படுத்தும் கவிஞனது சிந்தனைப் பல்வேறு தளங்களைப் பிணைக்கிறது. தான் காணும் சமுதாய சிந்தனைகளையும் தன் குறியீட்டுத் தளத்திற்குப் பயன்படுத்துகின்றான். மனிதன் நிலவுக்குச் செயற்கைக் கோள்களை அனுப்பி ஆய்வு செய்யும் அதே வேளையில் வேலை கிடைக்கத் தகுதி இருந்தும் பணம் இல்லாததால் வேலையைப் பெற முடியாத நிலையும் நீடிக்கிறது.
இது ஒரு குறியீட்டுக் கவிதை,

***“சில வேளைகளில்***
***எங்கள் கண்களுக்கு***
***வேலை நிலாக்கள்***
***தெரிவது உண்டு***
***எனினும்***
***பண ராக்கட் இல்லாததால்***
***பயணம் நாங்கள்***
***தொடர்வது இல்லை!”***

***(ப - 15, கிழக்கு சிவக்கும், கீழ்குளம் வில்லவன்)***

மற்றுமொரு குறியீட்டுக் கவிதையில் அரசியல்வாதிகளின் இரட்டை வேட நிலையைக் காட்டுகிறார். மக்களை ஏமாற்றும் மழை போன்று அரசியல்வாதியும் ஏமாற்றிக்கொண்டிருக்கிறான் என்று கவிதை விளக்குகிறது. இயற்கை நிகழ்வுகளும் மனிதனுக்கு ஏமாற்றத்தைத் தருகின்றன என்று கவிஞர் கூறுவது கவிஞரது ஆழ்ந்த இயற்கைப் பார்வையைக் காட்டுகிறது. அக்கவிதை,

***“அரசியல் வானத்தில்***
***அடிக்கடி***
***வார்த்தை மேகங்கள்***
***தவழ்வது உண்டு***
***ஆனால்***
***மழை மட்டும் பொழிவதில்லை , , ,”***

***(ப - 18, மேலது)***

என்று இடம்பெற்றுள்ளது.

கவிதையை உவமையாகப் பயன்படுத்தும் போது அதனிலும் இயற்கையைப் பாடுகின்றான் கவிஞன். கவிஞனின் மன ஓட்டம் எதனைக் கண்டாலும் அதனோடு மற்றொரு பொருளை ஒப்பு வைத்து நோக்கும் போக்கிற்கு அவனை அழைத்துச் செல்கிறது. அதற்கேற்ப அவன் செயல்படுகின்றான். இதற்காக அவன் இயற்கையைத் தேடி அலைவதில்லை. இயற்கையைக் காணும்போது அதன் தன்மையை உணர வேண்டும் என்ற சிந்தனை வலுப்படும்போது கவிதை பயன்படுபொருளாகிறது. கவிஞர் வில்லவன் பயன்படுத்தும் ஒரு இயற்கை உவமை காதலுக்குப் பயனாகிறது.

***“அலைகள் ஓசை எழுப்பவில்லை***
***என்பதனால்***
***கடலில் தண்ணீர் இல்லையென்று***
***பொருள் இல்லை!***
***உதடுகள் ஊமையாக இருப்பதனால்***
***உள்ளத்தில் காதல் இல்லையென்று***
***கருத்தில்லை!” (ப - 53, மேலது)***

இயற்கையில் காணும் காட்சியை குழந்தைகளைக் காணும் காட்சியுடன் பொருத்திப் பார்க்கச் சொல்கிறது கவிஞன் மனம். குழந்தையின் இயல்பான சிரிப்பு அழுகைக்கு கதிரவனின் தோற்ற76ம் மறைவிற்கு உவமைப்படுத்துகிறார். இன்ப துன்ப நிகழ்வுகளின் இயற்கையைப் போன்று குழந்தையின் சிரிப்பும் அழுகையும் இயற்கையானது. ஆந்தக் காட்சிகளில் கவிஞனது அக உணர்வு புலனாகிறது. “கவிஞன் எப்பொழுதும் ஒரு இலக்கிய உலகில் வசிப்பவன். அவனது

உள்மனத்தின் உணர்ச்சி ஊற்றுகளிலிருந்து ஜீவசக்தி பெற்றுவரும் வார்த்தைகள்தான் கவிதைகள்" என்ற புதுமைப்பித்தன் வரிகளும் சான்றாகிறது (புதுமைப்பித்தன் கட்டுடரைகள், ஆ.,ரா. வேங்கடாசலபதி (ப.ஆ). கவிதை வரிகள்,

***"கதிரவன் எழுந்தால் மலர்ந்து***
***விழுந்தால் இருளும்***
***புமியைப் போல***
***நீ சிரித்தால் சிரித்து***
***அழுதால் அழுகிறோம் நாங்கள்!"***

***(ப - 73, கிழக்கு சிவக்கும், கீழ்குளம் வில்லவன்)***

"இயற்கை மனிதனுடன் தொடர்புடையது அது அறிவுரைகளையும் படிப்பினைகளையும் மனிதனுக்குக் கொடுத்து அவனிடம் மனிதப் பண்பை வளர்க்கிறது" (ப - 6, மே.எ.பெ. பாரதிதாசன் பாடல்களில் இயற்கை, பீ. டாக்டர் நசீம்தீன்) என்று டாக்டர் மு. வ கூறுகிறார். மனிதன் புற உலகில் தனக்குக் கிடைப்பனவற்றைத் தேடித் திரிபவன். அவற்றின் மீது ஆசை வந்துவிட்டால் அதனை அடைய வேண்டும் என்று நினைப்பவன். அந்த ஆசை நிறைவேறாமல் போனால் அவன் மனம் துன்புறும். துவண்ட மனதைத் தூய்மைப்படுத்த, உற்சாகப்படுத்த இயற்கைக் காட்சிகள் உதவுகின்றன. தன் குறையை வெளிக்காட்ட முயலாது அதனை சரி செய்ய அவை துணைபுரிகின்றன. இயற்கைப் பொருட்கள் எதன்மீதும் பற்றுக் கொள்வதில்லை. தன் இயல்பை வெளிக்காட்டிக் கொள்வதுடன் தன்னை ஆறுதல்படுத்திக் கொள்ளும். இயற்கைப் பொருட்களின் இத்தன்மை மனிதனுக்குப் படிப்பினையைத் தருகிறது. அன்பை வளர்க்க உதவுகிறது.

***"குயிலைப் போல்***
***பாட முடியாத குறையை***
***மயில் தன் தோகையால்***
***தீர்க்க முயல்கிறது"***

***(ப - 6, கிழக்கு சிவக்கும், கீழ்குளம் வில்லவன்)***

என்ற கவிதை வரிகள்தான் அவை.

இயற்கை மனிதனுடன் கொண்ட தொடர்பு மனிதப் பண்புடன் சமுதாயத்தின் மீதான வருத்தங்களையும் வெளிப்படுத்தச் செய்கிறது. அதனை அவ்வாறே கவிஞன் வெளிக்காட்டிக் கொள்வதனையும் காணமுடியும். அவ்வரிகள்,

***"மலையினை எதிர்க்கும் மேகம்***
***மழைநீரால் அழிந்து போகும்***
***அலையினை எதிர்க்கும் ஆறு***
***ஆழிக்கும் அமிழ்ந்து போகும்***
***மலைநிகர் உள்ளங்கொண்ட***
***மக்களைச் சோதிக்காதே***
***இலையென எரிந்து போவாய்***
***இளைஞனின் உணர்ச்சித் தீயால்!"***

***(ப - 55, மேலது)***

என்று இடம்பெற்றுள்ளன.

இயற்கை முரண்களைக் கூட மனிதனுக்கு அறிவுறுத்தல்களாக மாற்றுகின்ற வலிமை கவிஞனுக்கு உண்டு. அதனை வெற்றிகரமாகக் கையாளும்போது கவிஞனுக்கும் வாசகனுக்கும் விருந்தளிக்கிறது. மலர்களையும் கண்களையும் காணும் கவிஞனுக்கு மலர்களை விட கற்கள் உயர்வானவையாகத் தெரிகின்றன. மலர்கள் மதிக்கப்படுவனவாக இருந்தாலும் கூட கற்கள் அவற்றின் பயனால் மலர்களை விட உயர்ந்து நிற்பதாகக் காட்டுகிறார் கவிஞர்.

***"மலர்கள் கோழைகள்!***
***சின்ன புயல் ஒன்று வீசினால் போதும்***
***சிதைந்து விடுகின்றன!***
***வெயில் சற்றுக் கடுமையாகிவிட்டால் போதும்***
***கருகிப் போகின்றன!***
***கற்களோ வீரர்கள்!***
***புயலையும் வெளிலையும் தாங்கிக் கொண்டு***
***பொதுப்பணி புரிகின்றன!"***

***(ப - 2, உழைப்பின் நிறம் கறுப்பு, கீழ்குளம் வில்லவன்).***

"கலை மூலன் கவிஞன் தன்னுடைய வேதனையைக் கொட்டி ஆற்றிக் கொள்கிறான். அதனால் அவன் உள் அமைதியைப் பெறுகின்றான்" (ப - 210 கவிதைக்கலை (இரண்டாம் பாகம்) பேரா. ரா. ஸ்ரீ. தேசிகன்). கவிஞனது சமுதாய உணர்வு சில நேரங்களில் வேதனையைத் தூண்டுகிறது. அவற்றை ஆற்றிக் கொள்ளக் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்துகின்றான்.

துடைப்பம் ஒன்றனைக் காணும கவிஞனது கண்கள் அதன் பயன்களை நினைவு கூர்கிறது. இயற்கையாக வரும் தென்றலும் புயலும் கோபத்தையும் அமைதியையும் தருவனவாக மாறுகின்றன. கவிதை பிறக்கிறது. கவிஞன் மனமும் அமைதியடைகிறது. ஒவ்வொரு முறையும் கவிஞன் தனது கலை வாயிலாக தன்னை ஆறுதல்படுத்திக் கொள்கிறான். அதனால் அவன் கலைஞன் ஆகின்றான். கவிஞர் வில்லவனும் தன் கவிதைகள் மூலம் சிறந்த கலைஞனாக மாறியுள்ளதைக் காணமுடிகிறது. துடைப்பம் என்ற தலைப்பில் உள்ள ஒரு கவிதை,

**"ஒரே நேரத்தில்**
**தென்றலாகவும் புயலாகவும் வீச**
**இவைகளால் தான் முடிகிறது**
**துரத்தி அடிப்பதால்**
**தூசுகளுக்கு இவை புயல்!**
**தடவிக் கொடுப்பதால்**
**பாதைகளுக்கு இவை தென்றல்!"**

***(ப-20, உழைப்பின் நிறம் கறுப்பு, கீழ்குளம் வில்லவன்)***

இயற்கையின் உண்மைகள் கவிஞனை சிந்திக்கச் செய்கின்றன. அந்தச் சிந்தனைதான் தவிஞனைக் கலைஞனாக மாற்றியுள்ளது. கலை ஆர்வமுள்ள ஒரு கவிஞனுக்கு இயற்கைப் பொருள் ஒவ்வொன்றும் பயன்படுபொருளாக மாறுகின்றன. அது கீழ்குளம் வில்லவனின் கதைகளில் உண்மையாகியுள்ளது. கவிஞனது பார்வைகள் ஒவ்வொன்றும் ஒரு கலைஞனைச் செதுக்கியுள்ளதும் புலனாகிறது.